## இல்லறமாகிய நல்லறம்

ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ஈடிணையற்ற அறிவாற்றலைப் பெற்றிருந்து மட்டுமின்றி ஆன்றோர் போற்றும் அருங்குணங்களையும் பெற்றிருந்தார். ஞான வடிவு பொன்னம்மாள் என்ற அன்பும் அடக்கமும் உடைய மாதரசியைத் திருமணம் புரிந்தார். அம்மையார் உயர்நிலை ஆசிரிய பயிற்சி பெற்றிருந்தார். தஞ்சை வந்த ஆபிரகாம் தம்பதியர் Rev. Blake அவர்களால் சீமாட்டி நேப்பியர் பெண் பாடசாலையில் அம்மையார் தலைமை ஆசிரியையாகவும் ஆபிரகாம் பண்டிதர் தமிழ் ஆசிரியராகவும் நியமிக்கப் பெற்று 1890 ஆம் ஆண்டு வரை அப்பள்ளியில் ஒருங்கே பணியாற்றி அப்பள்ளிக்குப் பேரும் புகழும் சேர்த்தனர். சுந்தர பாண்டியன், ஜோதி பாண்டியன் என்ற இரண்டு குமாரர்களும் அன்னபூர்ன வல்லி, சௌந்தர வல்லி, ஆனந்த வல்லி, மரகத வல்லி என்ற நான்கு குமாரத்திகளும் அவர்கட்குப் பிறந்தார்கள். குடும்பத்தில் தனது கடமைகளைச் செவ்வனே செய்து முடித்த அம்மையார் 1911ம் ஆண்டு இறைவனடி எய்தினார்கள். கோயில் பாக்கியம் என்னும் அம்மையாரை பண்டிதர் இரண்டாவது மனைவியாக மணந்து கொண்டார். வரகுண பாண்டியன், சௌந்தர பாண்டியன் என்ற இரண்டு குமாரர்களும், கனகவல்லி, மங்களவ வல்லி என்ற இரண்டு குமாரத்திகளும் அவருக்குப் பிறந்தார்கள்.

## பிணி தீர்க்கும் பணி

திண்டுக்கல்லில் இருந்த சமயம் அங்குள்ள சுருளிமலையில் ‘‘கருணானந்த மகிரிஷி’’ என்னும் ஒரு மகானை ஆபிரகாம் பண்டிதர் சந்தித்தார். அவர் ஆபிரகாம் பண்டிதருக்கு சித்த மருத்துவத்தின் மேன்மையை உணர்த்தியதோடு அநேக மருந்துகளின் செய்முறைகளையும் சொல்லிக் கொடுத்தார். 1877ம் ஆண்டு முதல் ஆபிரகாம் பண்டிதர் ‘‘கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்’’ என்ற பெயரில் பல அரிய மருந்துகளைத் தயாரித்து பெருமளவில் மக்களின் பிணி தீர்க்கும் பணியில் இறங்கினார். இம்மருந்துகளால் பண்டிதர் அவர்களுக்கு செல்வமும் புகழும் குவிந்தன.

## கண்கவர் தோட்டம்

தஞ்சையில் ஆபிரகாம் பண்டிதர் வண்ண மலர்களும் கனி தரும் மரங்களும் கொண்ட சுமார் 100 ஏக்கர் பரப்பளவுள்ள ஒரு அழகிய தோட்டத்தை உண்டாக்கினார். ‘‘கருணானந்தபுரம்’’ என்று அழைக்கப்பட்ட அத்தோட்டத்தில் ஒரு மிகப்பெரிய கிணறும் காற்றாடி இயந்திரமும் உண்டு. இத்தோட்டத்தை நிர்மாணிப்பதில் பண்டிதரின் மூத்தமகன் டாக்டர்.சுந்தர

பாண்டியன் பெரும் பங்கு வகித்தார். 1907 முதல் 1914 வரையிலான ஏழு வருடங்களில் பண்டிதர் அநேக விவசாயப் பொருட்காட்சிகளில் பங்கு பெற்று 6 தங்கப் பதக்கங்களையும் 37 வெள்ளிப் பதக்கங்களையும் 7 பித்தளை பதக்கங்களையும் பல நற்சான்று பத்திரங்களையும் பெற்றார். வேளாண்மை துறையிலும் சித்த மருத்துவத் துறையிலும் ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய அரும் பணிகளைப் பாராட்டி அரசு அவருக்கு ராவ் சாகேப் என்ற பட்டத்தை 1909ம் ஆண்டு வழங்கி சிறப்பித்தது.

## இசை ஆராய்ச்சி

ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் தம் வாழ்வின் பிற்பகுதியில் மிகுந்த ஆர்வத்துடன் தமிழிசை ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இசை விற்பன்னர்களையும் தமிழ் அறிஞர்களையும் நண்பர்களாகப் பெற்று இசைத் தமிழ் பற்றிய உண்மைகளைக் கேட்டறிந்தார். 1912 முதல் 1916 வரையிலான ஐந்து ஆண்டு காலத்தில் ''சங்கீத வித்தியா மகாஜன சங்கம்'' என்ற பெயரில் ஏழு இசை மாநாடுகளைத் தஞ்சையில் தம் சொந்த செலவில் அவர் நடத்தினார். இசைத் தமிழ் பற்றி தாம் கண்டறிந்த உண்மைகளையும் பழந்தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட அரிய விளக்கங்களையும் ஒருங்கே தொடுத்து சுமார் ஏழு ஆண்டுகள் பாடுபட்டு ''கருணாமிர்த சாகரம் முதற் புத்தகம்'' என்னும் சுருதிகளைப் பற்றிய இசைத் தமிழ் ஆராய்ச்சி நூலை 1917ம் ஆண்டு வெளியிட்டார். இந்நூல் சுமார் 1360 பக்கங்கள் கொண்ட ஓர் ஒப்பற்ற இசைக் களஞ்சியம் ஆகும். இங்ஙனம் இசைத் தமிழுக்கு முதன் முதலாக இலக்கணம் வகுத்து, அகில உலகும் பயன் பெறுமாறு அதனை அளித்திட்ட மாபெரும் இசை மேதை 1919ம் ஆண்டு ஆகஸ்டு 31ம் நாள் இறைவனடி எய்தினார்.

பண்டிதர் அவர்கள் எழுதி வைத்திருந்த இசைக் குறிப்புகளை வைத்து அவரது குமாரத்தி திருமதி.மரகதவல்லி துரை பாண்டியன் அவர்கள் ''கருணாமிர்த சாகரம் - இரண்டாம் புத்தகம்'' என்ற நூலை எழுதி முடித்தார். இந்நூல் இராகங்களின் ஸ்புட முறைகளை விளக்கும் ஓர் அரிய நூலாகும். அவரும் பண்டிதரின் மூத்த குமாரன் டாக்டர். சுந்தர பாண்டியனும் இணைந்து இந்நூலை 1946ம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டனர். டாக்டர்.சுந்தர பாண்டியனின் மூத்த மகன் Dr.A.S.தவபாண்டியன் அவர்கள் ''தமிழ் இசைச் செல்வம் தந்த தமிழன்பன் ஆபிரகாம்'' என்று பண்டிதரின் அருமை பெருமைகளை விளக்கி ஒரு நூல் எழுதியுள்ளார்கள். பண்டிதரின் இரண்டாவது குமாரர் ஜோதி பாண்டியன் இணைச் சுர முறையுடன் பாடல்களைப் பாடி, இசைத்தட்டில் பதிவு செய்து ஒரு புதுமையை உண்டாக்கினார். பண்டிதரின்

மூன்றாவது குமாரன் டாக்டர்.ஆ.வரகுணபாண்டியன் ''பாணர் கை வழி'' என்னும் சிறந்த இசை ஆய்வு நூலை இயற்றியுள்ளார். திருமதி.மரகதவல்லி துரைபாண்டியனின் மகனாகிய திரு.தனபாண்டியன் பண்டிதர் அவர்களின் இசை ஆராய்ச்சியின் தொடர்ச்சியாக அநேக இசை ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு அரசாங்கத்தால் ''கலைமாமணி'' என்ற பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

**பல்வேறு துறைகளில் நாட்டம்**

பண்டிதர் அவர்கள் புகைப்படக் கலையில் தேர்ச்சிப் பெற்று 1909ம் ஆண்டு லண்டனிலுள்ள அரசு கொண்டு 1912ம் ஆண்டு தஞ்சையில் மின் விசையால் இயங்கும் முதல் அச்சகமாக ''லாலி அச்சகம்'' என்ற மிகப்பெரிய அச்சகத்தை நிறுவி தமது நூல்களை அச்சிட்டார்.

**இறைபணி**

ஆபிரகாம் பண்டிதர் இறைவன் மீது பேரன்பு கொண்டிருந்தமையால் தம் சுற்றத்தார் யாவரையும் வாழ்விக்கும் பெற்றற்கரிய பண்பு பெற்றிருந்தார். மிகுந்த தாழ்மையுடையவராகவும் அடக்கம் உடையவராகவும் விளங்கினார். இந்திய நாட்டிற்கு ஏற்றவாறு கிறிஸ்துவ சமய உண்மைகளை எடுத்துரைக்க வேண்டுமென்ற ஆர்வம் கொண்டு ''நன்மறை காட்டும் நன்னெறி'' என்ற அரிய நூலை இயற்றினார். பண்டிதரின் இசைப்பணி, பாடல்கள் மூலம் இறைவனை மகிமை படுத்துவதாகவே திகழ்ந்தது. அநேக பாடல்களில் அவர் தமது வாழ்வின் அனுபவங்களைக் கூறியுள்ளார்.

தமிழ் இசையைக் கற்க விரும்பிய மாணவர்கள் தெலுங்கு சமஸ்கிருதம் கன்னடம் ஆகிய மொழிகளில் அமைந்த கீர்த்தனங்களையே கற்க வேண்டியதாக இருந்தது. அவை பெரும்பாலும் இந்து தெய்வங்களைப் போற்றிப் பாடும் பாடல்களாகவே இருந்தன. எனவே அக்கீர்த்தனைகளுக்கு தமிழில் பாடல் வரிகளை எழுதி, எல்லாம் வல்ல இறைவனைத் துதித்துப் பாடும் படியாகவும் பொருளுணர்ந்து பாடும் படியாகவும் வழி வகுத்தார். தமிழ் இசை பயில விரும்பிய கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு இது பெரும் பயனாக அமைந்தது. இப்பாடல்கள் அடங்கிய நூல் ''கருணாமிர்த சாகரத் திரட்டு'' என்ற பெயரில் 1907ம் ஆண்டு வெளியாகியது. பண்டிதர் தமது பாடல்களில் ''ஆபிரகாமின் தேவனே'' என்று இறைவனை அழைத்து மகிழ்ந்தார். ஆம்! ஆபிரகாமைப் பெயர் சொல்லி அழைத்த தேவன் ஆபிரகாம் பண்டிதரையும் அற்புதவிதமாக வழி நடத்தி ஆசீர்வதித்தார். இன்றும் இசை உலகம் அவரது ஆராய்ச்சிகளைப் போற்றிப் பாராட்டி மகிழ்கிறது என்பதில் ஐயமில்லை. நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன் அல்லவா?

தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**திருமதி.மல்லிகா துரைபாண்டியன்**
தஞ்சாவூா